*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume - III (1)**
**November 2018**

# பழந்தமிழரின் வீரம்

**அருள்ஜோதி.பா**
உதவிப் பேராசிரியை, முதுகலைத் தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்
தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

வீரம் என்பது மனிதனின் குணமாகும். அஞ்சாமை, அறிவு, மனத்தைரியம், உடல் வன்மை அனைத்துமே வீரத்தினை நிலைநிறுத்தும் சாதனங்களாகும். பண்டையத் தமிழர்கள், தான் எடுத்துக் கொண்ட கொள்கையை விட்டுக் கொடுக்காமலும், போரிலே புறமுதுகு காட்டாமலும் விளங்கினர். மேலும், கடமை தவறாமை, எண்ணங்களை வெளிப்படுத்துவதில் அஞ்சாமை, உறுதியான நடத்தை போன்ற பண்புகளால் வீரத்தில் மேன்மையடைந்துள்ளனர் எனலாம். அவ்வாறாக, வீரத்தில் சிறந்தோங்கிய மன்னர்கள்,புலவர்கள், பெண்டிரின் செயல்திறத்தை இக்கட்டுரை விளக்குகிறது.

## தமிழரின் வீரம்

தமிழரின் வாழ்வில் காதலும், வீரமும், இரு கண்களாய் பார்க்கப்படுகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு உறுதிப் பொருள்களையும் கொண்டுள்ளன நம் தமிழ் இலக்கியங்கள். அவற்றுள் அறத்தையும், பொருளையும் பற்றிப் பேசுவன புறமாகிய வீர இலக்கியங்களே எனலாம். வள்ளுவர் வீரத்தை உரன், ஆற்றல் எனும் சொற்களால் குறிப்பிடுகிறார். போரும், பகையும் இல்லாத உலகத்தை நாம் நினைத்தே பார்க்க முடியாது என்னும் நிலையில் தமிழச்சியானவள் ஈன்று புறந்தருதலை தனது முதன்மைக் கடமையாகச் செய்திருக்கிறாள். அதுமட்டுமின்றி, வீட்டிற்காகக் குழந்தையைப் பெறுவதைக் காட்டிலும் நாட்டிற்காகக் குழந்தையைப் பெற வேண்டும் எனும் வைராக்கியம் தமிழ்க்குலப் பெண்களிடம் இருந்துள்ளது. புலவர்களின் வீரமே தனித்துவம் மிக்கது. 'மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே' என்றிருக்க மன்னன் மட்டும் வீரத்தில் சளைத்தவன் அல்லன். தமிழ் மண்வாசம் வீசும் அனைவருக்குள்ளும் வீரம் விளைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

## முடியாளும் மன்னரது வீரம்

மன்னன் சிறந்தவன் என்பதைத் தீர்மானிப்பது வீரம் மட்டுமன்று, மறத்திலும் அறத்தைக் காண்பதே உண்மையான வீரம் என்பதைப் பண்டைய மன்னர்கள் உணர்ந்திருந்தனர்.

பலவகையான யாகங்களைச் செய்ததன் பயனாகப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனும் பெயரினைப் பெற்றவன்பாண்டிய மன்னன்.அவனது பெயரைக் கேட்டாலே பகைவரெல்லாம் அஞ்சி நடுங்கும் சிறப்புடையவன் என்றாலும், தனக்கு நிகரானவரோடு மட்டுமே போர் புரிவான், அதுவும் அறத்தின் வழியே மன்னனது போர் அமையும் என்கிறார் நெட்டிமையார்:

“ஆவும் ஆண் இயற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும், பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறா அதீரும்
எம் அம்பு கடிவிடுவதூம் நும் அரண் சேர்மின் என
அறத்து ஆறு நுவலும் பூட்கை மறம்”[1] (புறம் - 9)

என்ற பாடலில் பசு, பார்ப்பனர், பெண்கள், நோயுற்றவர், தென்புல வாழ்நர் போன்றோர் பேணுதற்குரியராகக் கருதியதனால் போர்க் காலத்தில் இவர்களை பாதுகாப்பான் மன்னன். வீரத்தோடு விளங்கியது மட்டுமல்லாமல் வீரத்திலும் மனிதநேயப் பண்பையும் அறத்தையும் போற்றிப் பாதுகாத்துள்ளனர் என்பது புலனாகும்.

வீரம் என்பது தன்னை விடப் பலவீனமானவோடு சண்டையிட்டு வெற்றி பெறுவது அல்ல; தான் கொண்ட கொள்கையிலே உறுதியுடன் நிற்பது, தான் செய்யத் தொடங்கிய செயலிலே இடர்ப்பாடுகள் ஏற்படினும், அஞ்சாமல் முடிப்பது; தன்மானத்திற்கு இழுக்கு நேராமல் வெற்றிபெறுதல், தன்னைத் தாழ்த்திப் பேசுவோரை நாணும்படிச் செய்தல் போன்றன ஆகும். இத்தகைய குறிக்கோளைக் கொண்டவரே இந்நாட்டு மன்னர். அந்த வகையில், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனின் வீரத்தைக் காணலாம்.

படை பலத்தால் இகழ்ந்துரைத்த பகை மன்னருடன் வீரப்போர் புரிந்து, அவர்களது சேனைகளைத் தாக்குவேன், அதுமட்டுமின்றி அவர்களையும் சிறை பிடிப்பேன் என்று வீரவுரை கூறுகிறான். அப்படி நான் செய்யவில்லை என்றால், என் குல மக்களே என்னை இகழ்ந்துரைப்பர் எனவும் அஞ்சி நிற்கிறான். பிறகு கூறும் வார்த்தைகளோ தனக்குத் தானே தண்டனையைத் தருகின்ற வார்த்தைகளாகும். புலவர்களிலே சிறந்தோனாகிய மாங்குடி மருதன் என்னுடைய நாட்டைப் பாடாது புறக்கணிக்கட்டும் என்றும், இரவலர்க்குக் கொடுக்க முடியாத அளவிற்கு வறுமை என்னைச் சூழட்டும் என்றும் கூறியிருப்பது, தனது வீரத்தின் மீது அவனுக்கிருந்த நம்பிக்கையைத் தெரிவிக்கிறது.

“சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்படேனாயின், பொருந்திய
என்நிழல் வாழ்நர், செல்நிழல் காணாது
கொடியன் எம்இறை எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக

உலகமோடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலைவரை;
புரப்போர் புன்கண் கூர..........”[2]

இந்தப் பாட்டிலே நெடுஞ்செழியனுடைய வீரமும்,நேர்மையும்,புலவர்களுடைய பெருமையும் காணப்படுகின்றது.

சோழன் கோச்செங்கணான்,சேரன் இரும்பொறையிடம் மாறாத பகைமை பூண்டு அவனுக்கெதிரே படையெடுக்கவும் செயதான். கழுமலம் எனுமிடத்தில் போர் நிகழ்ந்தது. போரிலே சேரன் தோல்வியைத் தழுவிச் சோழனால் சிறைபிடிக்கப் பட்டான். சிறைபட்ட சேரனுக்கோ தாள முடியாத தாகம் ஏற்பட்டது. உடனே அருகேயிருந்த காவலாளியிடம் தண்ணீர் கேட்டான். அவனோ காலம் தாழ்த்தி அலட்சியமாகத் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்தான். அந்த அவமானத்தைச் சேரனால் தாங்க முடியவில்லை. அவனின் மனவேதனையை,

“குழவி இறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப் படுத்திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீ தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே”[3] (புறம்-74)

என்ற பாடல் உணர்த்துகின்றது.

என் குலத்துதித்த குழந்தை இறந்து பிறந்தாலும், அதை வாளால் வெட்டிச் சாய்ப்பர். ஆனால், நானோ களத்தில் வாளால் சாகாமல், நாயைப் போல் கட்டிப் போடப்பட்டு, நட்புணர்ச்சி இல்லாத பகைவரிடம் கொஞ்சம் நீருக்காகக் கெஞ்சும் நிலையில் நிற்கிறேன் என்று வருந்துகிறான். வீரம் இழந்தோர் அதை தன்மானமாகக் கருதி உயிரை நீத்துள்ளனர் என்பது நெஞ்சை நெகிழ வைக்கும் செய்தியாகும்.

### குறுநில மன்னரது வீரம்

தனது உயிரைக் கொடுத்தும் தன் கொள்கையை விட்டுக் கொடுக்காத உறுதியாளர்களாய்க் குறுநில மன்னர்கள் இருந்துள்ளனர். கொடை,போர்,வீரம் என்பனவற்றில் உயர்ந்தோங்கியும் உள்ளனர் எனலாம்.

குமணன் எனும் குறுநில மன்னன் தன் தம்பியான இளங்குமணனால் அரசிழந்து காட்டில் வாழ்ந்து வந்தான். பெருந்தலைச்சாத்தனார் எனும் புலவர் தனது வறுமையைக்கூறி இரந்தார். புலவனுக்குக் கொடுக்கக் கையில் பொருள் இல்லை என்றாலும்,தனது உறுதியை நிறைவேற்றத் தயங்கவில்லை. குமணன் நன்கு ஆலோசித்த பின்,தன்னை விடச் சிறந்தபொருள் வேறில்லை என்று உடைவாளை எடுத்து புலவர் கையில் கொடுத்துத் தன்

தலையைக் கொண்டு செல்லுமாறு குனிந்து நிற்கிறான்.யாருக்கு வரும் இத்தகைய வள்ளல் குணம்.

"கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனென் ஆகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என
நாடு இழந்த அதனினும் நனிஇன்னாது என
வாள் தந்தனனே தலை எனக்கு ஈயத்
தன்னில் சிறந்தது பிறிது ஒன்று இன்மையின்
ஆடுமலி உவகையொடு வருவல்,
ஓடாப் புட்கை நின்கிழமையோன் கண்டே"[4] புறம் -65

என்ற பாடலின் வழி குமணன் தன் தலை போனாலும், புலவனின் வறுமையைத் தீர்க்க வேண்டும் என்னும் உறுதியை மட்டும் இழக்காத சிறந்த வீரத்தைக் காணலாம்.

கபிலர் முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி மன்னனைப் பற்றிப் பகை மன்னரிடம் கூறுகையில், போரினால் பாரியை ஒரு போதும் வெல்வது அரிது; பாணர் போல யாழை வாசித்துக் கொண்டு, விறலியர் உங்கள் பின்னே ஆடிக் கொண்டு யாசித்துச் சென்றால் உடனே உங்களுக்கு நாட்டையும் மலையையும் கொடுத்து விடுவான் என்கிறார்.

"மரந்தொறும் பிணித்த களிற்றினா் ஆயினும்
புலந்தோறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
தாளில் கொள்ளலிர்; வாளில் தாரலன்
யான் அறிகுவன் அது கொள்ளும் ஆறே;
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,
விரையொலி கூந்தல் நும் விறலியர் பின்வர
ஆடினிர், பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீயும்மே"[5]

இவ்வாறு பாரியின் வீரத்தைக் கபிலர் கூறக் கேட்டதும் மூவேந்தர்கள் போரினால் பாரியை வெல்ல முடியாது எனக் கருதி அவரவர் நாடுகளை அடைந்தனர்.

இவ்வாறு கொடைவீரத்திலும், போர் வீரத்திலும் சிறந்து விளங்கிய தமிழர் நம் குறுநில மன்னர்கள்.

**பெண்டிரது வீரம்**

ஆண்கள் போர்க்களத்தில் வீரத்துடன் போரிடுவதைக் காட்டிலும் பெண்களின் வீரம் பெருமை கொள்ளச் செய்கின்றது. உன் மகனை எங்கே என்று கேட்ட பெண்ணிடம் அதற்கு அந்த வீரத்தாய், 'புலியிருந்த குகை அவனைப் பெற்ற என் வயிறு. அவன் எப்போதும் புகழ் சிறக்கப் போர்க்களத்தில் தான் இருப்பான்' என்கிறாள்.

"புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே"[6] (புறம்-86)

பூங்கண் உத்திரையார் பாடிய பாடல் ஒன்றில், தாய் ஒருத்தியிடம் போருக்குச் சென்ற உன் மகன் யானை மேல் வேலெறிந்து யானையைக் கொன்று அவனும் வீரமரணம் அடைந்தான் என்கின்றனர் வீரர்கள். அதனைக் கேட்ட அந்தத் தாய் அவனைப் பெற்றதை விட பெரிதும் மகிழ்ந்து,

"களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்"[7] (புறம்-277)

என்று பெருமிதம் கொள்கிறாள். நச்செள்ளையார் பாடிய பாடலில் முதுமகள் ஒருத்தி, தன் மகன் போர்க்களத்தில் புறப்புண் பட்டு இறந்தான் என்று கூறக் கேட்டதும் என்மகன் அவ்வாறு இறந்தது உண்மையானால், அவன் பால் குடித்த என் மார்பை அறுத்து எறிவேன் என்று கூறி கையில் வாளோடு போர்க்களம் புகுந்தாள்.

"படை அழிந்து மாறினன் என்று பலர் கூற
மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலை அறுத்திடுவேன்"[8] (புறம்-278)

ஒக்கூர் மாசாத்தியார் பாடிய பாடலில், பெண்களின் வீரமானது கேட்போர் வியக்கும் வண்ணம் உள்ளது. பெண் ஒருத்தி, முதல் நாள் போரில் தந்தையை இழந்தாள். நேற்றைய போரில் கணவனை இழந்தாள். இன்றும் போரின் முரசம் கேட்டு, தன் குலத்திற்கு வாரிசு வேண்டும் என்று எண்ணாது தன் ஒரே மகனைச் சின்னஞ்சிறு பாலகனை அழைத்து அவன் தலைக்கு எண்ணெய் நீவி வெள்ளைத் துணி உடுத்தி கையில் வேலைக் கொடுத்துப் போர்க்களம் நோக்கிப் போ என்று அனுப்பி வைக்கிறாள்.

"ஒரு மகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமோ"[9] (புறம் -279)

ஔவையார் தமது பாடலில், போரில் விழுப்புண் பட்டு இறந்த தன் மகனைக் கண்ட முதுமகளின் வற்றிய முலையில் வீரப்பால் சுரந்தது என்று கூறுகிறார்.

"இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய
சிறப்புடை யாளன் மாண்பு கண்டருளி
வாடுமுலை ஊறிச் சுரந்தன"[10] புறம்-295

என்பதன் மூலமாக,பண்டைய தாய்மார்கள் வீரத்தில் ஆண்களுக்கு நிகராக இருந்துள்ளனர் என்பது புலனாகிறது.

**புலவரது வீரம்**

பழந்தமிழ்ப் புலவர்கள்,தம் மனத்தில் உள்ள எண்ணங்களை எச்சமயத்திலும், யாருக்கும் அஞ்சாது ஆண்மையுடன் எடுத்துரைக்கும் பண்பினைப் பெற்றிருந்தனர். மேலும் சொல் வீரத்தால் மன்னர்களையே வென்று நண்பராக்கியுள்ளனர் என்பதில் ஐயமில்லை. ஊதாரணமாக ஔவை-அதியமான், பாரி-கபிலர், கோப்பெருஞ்சோழன்-பிசிராந்தையார் போன்றோரது நட்பானது சரித்திரம் படைக்கும் நட்பென்றே கூறலாம். இவர்களது நட்பால் பல போர்கள் தடுக்கப்பட்டு அமைதி நிலவியது. அண்டை நாட்டுடன் ஏற்படும் போர் மட்டுமல்லாது சொந்த நாட்டிற்குள் ஏற்படும் போர்களைப் புலவர்கள் தம் சொல்லாற்றலால் நிறுத்தியுள்ளனர் என்பதைக் கோவூர்கிழார் பாடலால் அறியமுடிகின்றது.

சோழ மன்னர்களான நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்குமிடையில் பகை மூண்டது அப்பொழுது உங்களில் எவர் தோற்பினும் தோற்பவர் உன் சோழர் குடியைச் சேர்ந்தவரே ஆவார். நீங்கள் போரிடுவது உலகநியதி அன்று.இச்செயல் உங்கள் குடிப் பெருமையை அழித்து விடும்.மேலும் இப்போரைச் செய்தால் அது பிறநாட்டுப் பகைவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தரும் எனக் கூறி போரைத் தவிர்க்க வலியுறுத்தியதனை

“ஒருவீர் தோற்பினும்,தோற்பது நும்குடியே,
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே”[11] (புறம்-45:5-7)

எனும் புறநானூற்று வரிகள் புலப்படுத்துகின்றன.

**முடிவுரை**

தன்மானம் மிக்க தமிழர்களின் மேற்கண்ட வீரமானது சீன தேசத்தின் பள்ளிகள் தோறும் சென்றிருப்பது பெருமைக்குரியதே, சீனாவில் கன்பியூஷியஸ் என்பவர், ‘ஏ சீன தேசத்துக் குழந்தைகளே இந்த ஜென்மத்தில் நீங்கள் ஒழுக்கமானவர்களாக இருந்தால் அடுத்த ஜென்மத்திலே இந்தியக் குழந்தைகளாகப் பிறக்கக்கூடிய பெரும்பேறு அடையப் பெறுவீர்’ என்று கூறியிருப்பது தமிழரின் வீரத்தைப் பறை சாற்றுவதாய் அமைந்துள்ளது.

போரிலே அறத்தையும் நேர்மையையும் கடைப்பிடித்து வெற்றிக்கொடி நாட்டிய தமிழர்கள், தன்மானத்திற்குக் கேடு வரும்பொழுது அஞ்சியுள்ளனர் என்பது புலனாகிறது. தலைபோனாலும் கொண்ட கொள்கையினை விட்டுக் கொடுக்காத உறுதிப்பாடு கொண்டவராய் மன்னரும் புலவரும் வாழ்ந்திருப்பது நெஞ்சை நெகிழ வைக்கிறது.

பண்டைய காலத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் வீரம் மிக்கவராய் இருந்தனர்.தமிழர்கள் நிலத்திலே வெறுமனே வீழ்வதில் பயனில்லை. களத்திலே வீழ்ந்து தாய் நாட்டிற்காக மடிவதே மேல் என்பதைக் கொள்கையாய் கொண்டிருந்தனர் என்பதைச் சங்காலப் பாடல்களின் வழி அறிய முடிகிறது.

**குறிப்புதவி நூல்கள்**


1. புறநானூறு - 1, 2 (தொகுப்பு) பதிப்பாசிரியர் கு.வே. பாலசுப்பிரமணியன்,
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.